ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2273/85 - 2022 අප්‍රේල් මස 01 වැනි සිකුරාදා - 2022.04.01
*2273/85 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

***1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டம்***

*1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 32 மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழ் விளையாட்டுத்துறை அமைச்சரால் ஆக்கப்பட்ட பணிப்புரை*

*32 மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழ் ஆக்கப்பட்ட பணிப்புரை*

*இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ ஆகிய நான், 1973 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க விளையாட்டுக்கள் சட்டத்தின் 32 (ஆ) மற்றும் 33 ஆம் பிரிவுகளின் கீழ் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில் றக்பி விளையாட்டு தொடர்பாகவான இலங்கை றக்பி சம்மேளனத்தின் பதிவினை உடன் அமுலுக்கு வரும் வகையில் தற்காலிகமாக இடைநிறுத்துவதுடன், தற்காலிக செயலொழுங்காக இலங்கை றக்பி சம்மேளனத்தின் நிர்வாகம் மற்றும் ஏனைய யாதேனும் தொடர்புடைய நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதற்கும் மற்றும் ஏற்புடைய பதவிதாங்குநர் தேர்தல்களுக்கு அழைப்பு விடுப்பதற்கும் மற்றும் நடாத்துவதற்கும் அது வரையில் உகந்தவிதமாக நிறைவேற்றுவதன் பொருட்டு 2022, ஏப்பிறல் மாதம் 01 ஆம் திகதியிலிருந்து அமுல்படுத்தப்படும் விதமாக விளையாட்டு அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமான திரு. அமல் எதிரிசூரிய அவர்களை உரிய அதிகாரம் பொருந்தியவராக இத்தால் நியமனஞ் செய்கின்றேன்.*

**நாமல் ராஜபக்ஷ** (பா. உ.),
*இளைஞர் மற்றும் விளையாட்டுக்கள் அமைச்சர்.*

கொழும்பு,
*2022, ஏப்பிறல் 01.*

EOG *04-0008*

1A - G 36537 — 15 (2022/04) இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*